தருமபுரி முதன்மைக் கல்வி அலுவலர் அவர்களின் செயல்முறைகள்
முன்னிலை – திருமதி. ந.கீதா எம்.எஸ்சி, எம்.எட்,
ந.மு.எண். 0165 / அ1 / 2020 நாள் 26.05.2020

பொருள் தமிழ்நாடு அமைச்சுப் பணி – பணிவரன்முறை– அரூர் கல்வி மாவட்டம் மொரப்பூர் வட்டாரக் கல்வி அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரியும் செல்வி. மு.மீரா என்பாருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல்– சார்பாக.

பார்வை
1. சென்னை–6, தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையக் குழு துணை செயலாளரின் கடிதம் எண்.5426/PSD-2H2/2017 நாள். 23.09.2017
2. தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி) அவர்களின் செயல்முறைகள் ந.க.எண் 6375/அ4/இ1/2014 நாள். 10.2017 மற்றும் நாள். 11.11.2017
3. தருமபுரி மாவட்டக் கல்வி அலுவலரின் ந.க.எண் 6298/அ1/2017 நாள் 14.11.2017
4. அரசாணை எண் 101 பள்ளிக் கல்வி (வரவு செலவு) துறை நாள் 18.05.2018
5. அரூர் மாவட்டக் கல்வி அலுவலர் கடித ந.க.எண் 2207/அ1/2019 நாள். 23.12.2019

உசஉ

பார்வை (1)–ல் கண்ட தமிழ்நாடு அரசப்பணியாளர் தேர்வாணைய கடிதத்தின்படி 2015–16 (IPhase)ஆம் ஆண்டில் நேரடி நியமனம் மூலம் இளநிலை உதவியாளர் பணியிடத்திற்கு (Group-IV) நியமனம் செய்ய தேர்வு செய்யப்பட்டு பார்வை (3)ல் கண்ட தருமபுரி மாவட்டக் கல்வி அலுவலரின் செயல்முறைகளின்படி தருமபுரி மொரப்பூர் வட்டாரக் கல்வி அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக 16.11.2017 முற்பகல் பணிநியமனம் பெற்று பணிபுரிந்து வரும் **செல்வி மு. மீரா** என்பாருக்கு இளநிலை உதவியாளர் பணியில் பணிவரன்முறை செய்திட கோரிய கருத்துருக்களை பார்வை 5ல் கண்டவாறு அரூர் மாவட்டக் கல்வி அலுவலர் கடிதத்தின்படி பணிந்தனுப்பியுள்ளார்.

மேற்கண்ட கருத்துருவிணை கூர்ந்தாய்வு செய்து, பார்வை (4)ல் கண்ட அரசாணையில் இளநிலை உதவியாளருக்கான நியமன அலுவலர் முதன்மைக் கல்வி அலுவலர் என தெரிவிக்கப்பட்டுள்ளதால், கலம் 2ல் கண்ட பணியாளருக்கு கலம் 4ல் கண்ட நாளில் பணிவரன்முறை செய்து இதன் மூலம் ஆணை வழங்கப்படுகிறது.

| வ. எண் | பணியாளர் பெயர் மற்றும் பணிபுரியும் பள்ளி | இளநிலை உதவியாளராகப் பணியில் சேர்ந்த நாள் | இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்யும் நாள் |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1. | **செல்வி. மு.மீரா**<br>இளநிலை உதவியாளர்<br>வட்டாரக் கல்வி அலுவலகம்<br>மொரப்பூர்<br>தருமபுரி மாவட்டம் | 16.11.2017<br>முற்பகல் | 16.11.2017<br>முற்பகல் |

— 2 —

சென்னை உயர்நீதி மன்றத்தின் மதுரை கிளையில் இந்த நியமனம் சார்ந்து நிலுவையில் உள்ள 2015–2016 ஆம் ஆண்டு தொகுதி IV ன் கீழ் உள்ள பணிகளுக்கான நியமனம் தொடர்பான வழக்குகளின் முடிவிற்கு உட்பட்டு இந்த பணிவரன்முறை ஆணை வழங்கப்படுகிறது.

மேற்கண்ட பணியாளருக்கு இளநிலை உதவியாளர் பணியில் பணிவரன்முறை செய்யப்பட்ட நாள் முதல் தொடர் மூன்றாண்டு பணிக்காலத்தில் ஈராண்டுக் காலம் தகுதிக்காண் பருவ காலமாக நிர்ணயம் செய்து ஆணை வழங்கப்படுகிறது.

தகுதிகாண் பருவத்தில் வரையறுக்கப்பட்ட மாவட்ட அலுவலக நடைமுறை தேர்வினையும், இளநிலை உதவியாளருக்கான அடிப்படை பயிற்சியினை (பவானிசாகர் பயிற்சி) முடித்தல் வேண்டும். தகுதிகாண்பருவம் முடித்தமைக்கான ஆணை பெறப்பட்ட பின்னரே இரண்டாவது ஆண்டு ஊதிய உயர்வு அனுமதிக்க வேண்டும்.

பணிவரன்முறை செய்யப்பட்ட விவரங்களை சம்மந்தப்பட்ட பணியாளரின் பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ள சார்ந்த பள்ளித் தலைமையாசிரியருக்கு தெரிவிக்கப்படுகிறது.

பணியாளரின் சார்பாக பெறப்பட்ட பணிப்பதிவேடு தொகுதி –1 இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது. பணிப்பதிவேடு பெற்றுக் கொண்டமைக்கு ஒப்புதலை அனுப்பி வைத்திட சார்ந்த பள்ளித் தலைமையாசிரியர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

இணைப்பு – பணிப்பதிவேடு அசல் 1 தொகுதி

முதன்மைக் கல்வி அலுவலர்,
தருமபுரி

பெறுதல்
வட்டாரக் கல்வி அலுவலர் மொரப்பூர்
நகல் –மாவட்டக் கல்வி அலுவலர், அரூர்
நகல்–செல்வி.மு.மீரா, இளநிலை உதவியாளர், வட்டாரக் கல்வி அலுவலகம் மொரப்பூர்
தருமபுரி மாவட்டம் (மாவட்டக் கல்வி அலுவலர் மூலமாக)